Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

FRIDAYDAY, JULY 04 2025

வெள்ளிக்கிழமை 04, ஜூலை 2025 | ஒளி: 10 கதிர் 276 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ FREE

## மேர்வினுக்கு பிணை



முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா உள்ளிட்ட மூன்று பேரை தலா 2.5 மில்லியன் ரூபாய் சொந்த பிணை மற்றும் 200,000 ரூபாய் ரொக்கப் பிணையில் விடுவிக்க கம்பஹா மேல் நீதிமன்ற நீதிபதி டபிள்யூ.கே.டி.விஜேகோன், வியாழக்கிழமை (03) அன்று உத்தரவிட்டார்.

ஜெயந்த கப்ரால் மற்றும் நவீன் வீரகோன் ஆகியோர் பிணை வழங்கப்பட்ட மற்ற சந்தேக நபர்களாவர்.

கிரிபத்கொட நகரில் அரசாங்க நிலத்தை மோசடியாக விற்பனை செய்ததாக கூறப்படும் வழக்கில் மஹர நீதவான் நீதிமன்றத்தால் அந்த மூவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.




### குடும்பத் தேவைக்காக வாங்கிய கடனால்

# பெரும் பகுதியினர் ஆபத்தில் உள்ளனர்

தங்கள் குடும்பத் தேவைகளுக்காக எடுக்கப்பட்ட கடன் காரணமாக நாட்டின் மக்கள் தொகையில் பெரும் பகுதியினர் ஆபத்தில் உள்ளனர் என ஐக்கிய நாடுகள் சபையின் மேம்பாட்டுத் திட்டத்தின் (UNDP) வதிவிடப் பிரதிநிதி திருமதி அசுசா குபோடா வியாழக்கிழமை (03) தெரிவித்தார்.

குறிப்பாக, நாட்டின் மக்கள் தொகையில் 33.4 சதவீதம் பேர் கடன் காரணமாக ஆபத்தில் உள்ளனர் என்றும், இதன் விளைவாக இழப்புகளை எதிர்கொள்கின்றனர் என்றும் அவர் கூறினார்.

நிதி கல்வியறிவு பாடத்திட்டம், அறிவுறுத்தல் வீடியோக்கள் மற்றும் நிதி கல்வியறிவு திட்டத்திற்கான தகுதிவாய்ந்த பயிற்சியாளரை அறிமுகப்படுத்துவதற்காக இலங்கை மத்திய வங்கியில் வியாழக்கிழமை (03) நடைபெற்ற விழாவில் ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்டத்தின் நிரந்தர பதிவிடப் பிரதிநிதி திருமதி அசுசா குபோடா இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார். தொடர்ச்சி P2

## ஹசீனாவுக்கு ஆறு மாத் சிறை

### சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் உத்தரவு

பங்களாதேஷ் பிரதமராக இருந்த அவாமி லீக் கட்சித் தலைவர் ஷேக் ஹசீனாவுக்கு எதிராக கடந்த ஆண்டு மாணவர்கள் தொடர் போராட்டம் நடத்தியுள்ளனர்.

இது வன்முறையாக மாறியதையடுத்து, கடந்த ஆண்டு ஆகஸ்ட் 5ஆம் திகதி இந்தியாவில் தஞ்சமடைந்தார். அதன் பிறகு பங்களாதேஷில் முகமது யூனுஸ் தலைமையில் இடைக்கால அரசு

அமைந்தது. இதையடுத்து, சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயத்தில் (ஐசிடி) ஹசீனா மீது பல்வேறு வழக்குகள் பதிவாகி உள்ளன. இந்த வழக்கை விசாரித்த தீர்ப்பாயம் ஹசீனா ஆஜராக உத்தரவிட்டது.

ஆனால் அவர் ஆஜராக வில்லை.



தொடர்ச்சி P2

## "சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுங்கள்"

நாட்டில் ஆகக் குறைந்த பட்சம், சட்டம் ஒழுங்கையாவது நிலைநாட்டுங்கள் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தார்.

கல்கிசை கடற்கரையில் சடலமொன்று கரையொதுங்கியுள்ளது. கந்தானைப் பகுதியில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் உயிரொன்று பலியாகியுள்ளது. நாட்டில் சிறிது காலமாகவே தொடர்ச்சியாக கொலைகள் நடந்து வருகின்றன. இது குறித்து அரசாங்கத்திடம் கேள்வி எழுப்பி, அறிவுறுத்தல் விடுத்தும், இந்த விடயத்தில் அரசாங்கத்திடம் எந்த பதிலும் இல்லை என்றும் குற்றஞ்சாட்டினார்.



தொடர்ச்சி P2

### 4 நிறுவனங்களே

## 'சானிட்டரி' நாப்கின்களை விநியோகிக்கலாம்

பாடசாலை மாணவிகளுக்கான சுகாதார நாப்கின் (அணையடை ஆடை) விநியோகத் திட்டம், 2025ஆம் ஆண்டு நான்கு அதிகாரப்பூர்வமாக சான்றளிக்கப்பட்ட வர்த்தக நிறுவனங்கள் மூலம் பிரத்தியேகமாக மேற்கொள்ளப்படும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை தர நிர்ணய நிறுவனத்தில் (SLSI) பதிவுசெய்யப்பட்டு



SLS 1732:2022 இன் கீழ் சான்றளிக்கப்பட்ட இந்த நிறுவனங்கள் பாடசாலைகளுக்கு நேரடியாகச் சென்று மாணவர்களுக்கு சுகாதார நாப்கின் பாக்கெட்டுகளை விநியோகிக்க அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்று அமைச்சு தெரிவித்துள்ளது. தொடர்ச்சி P2

### 'ஹரக் கட்டா' குற்றப்பத்திரிகையில்

## முதற்கட்ட ஆட்சேபனையை மேல் நீதிமன்றம் நிராகரித்தது



குற்றப் புலனாய்வுத் துறையின் (CID) காவலில் இருந்து தப்பிக்கச் சதி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள 'ஹரக் கட்டா' எனப்படும் நதுன் சிந்தக மற்றும் இரண்டு பிரதிவாதிகளுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகையின் பராமரிக்கப்படும் தன்மையை எதிர்த்து, பிரதிவாதிகள் எழுப்பிய ஆரம்ப ஆட்சேபனையைக் கொழும்பு மேல் நீதிமன்றம் நிராகரித்தது.

ஆரம்ப ஆட்சேபனையை நிராகரித்த நீதிபதி, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் (PTA) கீழ் சட்டமா அதிபரால் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட குற்றச்சாட்டுகளை மேல் நீதிமன்றத்தில் சட்டப்பூர்வமாக விசாரிக்க முடியும் என்று தீர்ப்பளித்தார்.

குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதில் எந்த நடைமுறை பிழைகளும் இல்லை என்றும் நீதிமன்றம் குறிப்பிட்டது. வழக்கு ஆகஸ்ட் 5ஆம் திகதி விசாரணைக்கு ஒத்திவைக்கப்பட்டது.



## அடிக்கல் நாட்டு விழா...

இலங்கை விமானப்படையின் பங்களிப்புடனும், இந்திரா டிரேடர்ஸ் குழுமத்தின் நிதி உதவியுடன் மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையில் புதிய ஐந்து மாடிக் கட்டிடத்துக்கான அடிக்கல் நாட்டு விழா வியாழக்கிழமை (03) நடைபெற்றது.

இத்திட்டத்தின் மேற்பார்வை மற்றும் தொழிலாளர் பங்களிப்பு இலங்கை விமானப்படையால் மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்கான நிதி உதவியை இந்திரா டிரேடர்ஸ் குழுமத்தின் நிறுவனர் மற்றும் தலைவர் இந்திரா குமார சில்வா வழங்கி, வைத்தியசாலையின் மேம்பாட்டிற்கு பெரும் பங்களிப்பு செய்துள்ளார். தொடர்ச்சி P2

## "குழந்தைகளுக்கான பிளாஸ்டிக்கில் சிக்கல்"

குழந்தைகளுக்கான உணவுப் போத்தல்கள், மதிய உணவுப் பெட்டிகள், தண்ணீர் போத்தல்கள் மற்றும் பொம்மைகள் போன்ற தீங்கு விளைவிக்கும் பிளாஸ்டிக் பொருட்களை இறக்குமதி செய்பவர்கள் மற்றும் உற்பத்தி செய்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை அடுத்த இரண்டு மாதங்களுக்குள், எடுக்கப்படும் என்று வர்த்தகம், வர்த்தகம், உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு மேம்பாட்டு அமைச்சர் வசந்த சமரசிங்க வியாழக்கிழமை(03) அன்று தெரிவித்தார்.



தொடர்ச்சி P2

## திருமணச் சான்றிதழைக் காட்டிய வன்புணர்வு சந்தேகநபர் விடுதலை



வயது குறைந்த சிறுமியை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்ட ஒருவரை காலி மேல் நீதிமன்ற நீதிபதி பூர்ணிமா பரணகம விடுதலை செய்துள்ளார்.

குற்றம் சாட்டப்பட்டவரும் பாதிக்கப்பட்டவரும் திருமணமானவர்கள் என்றும் அவர்கள் ஒரு குழந்தையின் பெற்றோர் என்றும் பிரதிவாதி நீதிமன்றத்தில் தெரிவித்தபோது, அவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

2020ஆம் ஆண்டு சம்பவம் நடந்தபோது அவளுக்கு 14 வயது, அவருக்கு 17 வயது, சம்பவம் தொடர்பிலான மேலதிக நடவடிக்கைகளை நெலுவ பொலிஸார் எடுத்துள்ளனர்.

இளம் பெண்,தனது குழந்தையுடன் நீதிபதி முன் ஆஜரானார், தொடர்ச்சி P2

### சமிக்ஞையை மீறி பறந்த மோட்டார் சைக்கிள்

## பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயம்; ஒருவர் ஓட்டம்

நீர்கொழும்பு, துங்கல்பிட்டி பகுதியில் சமிக்ஞையை மீறி சென்ற, மோட்டார் சைக்கிள் மீது பொலிஸார் வியாழக்கிழமை (03) நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

போதைப்பொருள் கடத்தல் குறித்து தகவல் கிடைத்ததை அடுத்து, லெல்லம பாலம் அருகே இரண்டு பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர். அப்போது அவ்வழியாக, மோட்டார் சைக்கிளில் வந்துகொண்டிருந்துள்ளது. அதில், இரண்டு பேர் இருந்தனர். மோட்டார் சைக்கிளை நிறுத்துமாறு பொலிஸார் சமிக்ஞை காண்பித்துள்ளனர்.

எனினும், மோட்டார் சைக்கிள் ஓட்டுநர், மோட்டார் சைக்கிளை நிறுத்தாமல் மிக வேகமாக முன்னோக்கு செலுத்தியுள்ளார். பொலிஸார் பின்னால் துரத்திச் சென்றனர், அதன் போது, ஒரு லொரியில் அந்த மோட்டார் சைக்கிள் மோதியுள்ளது.

ஒரு சந்தேக நபரை கைது செய்ய முடிந்தாலும், மற்றையவர் தப்பிச் சென்றதால், அவர் பொலிஸாரால் துரத்தப்பட்டார்.

கைது செய்வதிலிருந்து தப்பிக்க முயன்றபோது இரண்டாவது சந்தேக நபரின் காலில் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக பொலிஸ் பிரிவு தெரிவித்துள்ளது. காயமடைந்த சந்தேக நபர் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.






### குடும்பத் தேவைக்காக வாங்கிய கடனால்

# பெரும் பகுதியினர் ஆபத்தில் உள்ளனர்

உணவு, சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற அடிப்படைத் தேவைகளுக்காக கடன் வாங்கியவர்கள் பாதிக்கப்படக்கூடிய மக்களில் உள்ளனர் என்றும், அவர்கள் வாங்கிய கடன்களால் விரைவாக தங்கள் சொத்துக்களை இழக்கும் அபாயம் உள்ளது என்றும் அவர் கூறினார்.

இந்த உண்மைகள் ஐக்கிய நாடுகள் சபையின் 2023 பல்-பாதிப்பு குறியீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளன என்றும், இந்த உண்மைகளை அவர் பலமுறை அவர்களுக்கு நினைவூட்டியதாகவும் திருமதி குபோடா கூறினார். இலங்கை மக்கள் தொகையில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் பல அம்சங்களில் ஆபத்தில் இருப்பதாக அது கூறுவதாக அவர் கூறினார்.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு போன்ற காரணிகளைக் கருத்தில் கொண்டு, இந்த நாட்டு மக்கள் தற்போது அனுபவித்து வரும் கடன் பிரச்சனை இன்னும் கடுமையானதாக மாறுவதற்கான வாய்ப்புகள் அதிகம் என்றும் அவர் கூறினார். சமூகத்தினருடனான கலந்துரையாடல்களின் போது, கடன் வாங்கிய இலங்கையர்களிடையே, குறிப்பாக பெண்களிடையே, நிதி முடிவுகளை எடுக்கவும் கடன் பிரச்சினையை நிர்வகிக்கவும் போதுமான நிதி கல்வியறிவு இல்லாதது கடன் பிரச்சினையை அதிகரிக்கும் ஒரு பெரிய பிரச்சினையாகும் என்று திருமதி குபோடா கூறினார்.

கடன் நிலைத்தன்மையை உருவாக்க பலதரப்பட்ட தீர்வுகள் தேவை என்றும், கடன் நிலைத்தன்மை வீட்டு மட்டத்திலும் ஏற்பட வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். எனவே, ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்டம் இலங்கை மத்திய வங்கியின் கடன் மேலாண்மை உத்திகள், நிதி கல்வியறிவை மேம்படுத்துதல் மற்றும் கடனுடன் தொடர்புடைய அபாயங்களுக்கு இந்த நாட்டின் மக்களின் மீள்தன்மையை மேம்படுத்த வாழ்வாதாரங்களை பன்முகப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளை ஆதரிக்க முடிந்தது என்பதில் அவர் திருப்தி தெரிவித்தார்.

கடந்த ஆண்டு நிதி கல்வியறிவு வழிகாட்டுதல் அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்டம் (UNDP) இலங்கை மத்திய வங்கிக்கு மும்மொழி நிதி கல்வியறிவு தொகுதிகள், கற்றல் கருவித்தொகுப்பு மற்றும் தொடர்ச்சியான அறிவுறுத்தல் வீடியோக்களை உருவாக்க ஆதரவளித்ததாக அவர் கூறினார்.

இளைஞர்கள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களின் நிதி கல்வியறிவை மேம்படுத்தும் நோக்கத்துடன் இந்த முயற்சி தொடங்கப்பட்டது என்று அவர் கூறினார். இலங்கை மத்திய வங்கியின் நிதி கல்வியறிவு முகாமில் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (JICA) இணைந்ததில் மகிழ்ச்சி அடைவதாகவும் அவர் கூறினார்.

## "சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுங்கள்"

### சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் உத்தரவு

இதையடுத்து நீதிமன்ற அவமதிப்பு வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இந்நிலையில், ஐ.சி.டி யின் தலைவர் நீதிபதி முகமது குலாம் முர்துசா மஜும்தார் தலைமையிலான 3 பேர் அடங்கிய அமர்வு, நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் ஹசீனாவுக்கு 6 மாதம் சிறை தண்டனை வழங்கி புதன்கிழமை (02) அன்று தீர்ப்பு வழங்கியது. பங்களாதேஷில் இருந்து தப்பிய பிறகு ஹசீனாவுக்கு சிறைத் தண்டனை வழங்கப்பட்டிருப்பது இதுதான் முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.



## "சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுங்கள்"

இலங்கை ராமஞ்ஞ மஹா பீடத்தினால் இரு வருடங்களுக்கு ஒரு முறை நடத்தப்படும் உபசம்பதா புண்ணிய நிகழ்வு அனுராதபுரம் கலாவெவ பிரதேசத்தில் வியாழக்கிழமை (03) இடம்பெற்றது. 74 ஆவது தடவையாக இடம்பெற்ற இவ்வருட நிகழ்வில் 400 பிக்குகள் உபசம்பதா பெற்றனர். இப்புண்ணிய இந்நிகழ்வில் பங்கேற்றதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், நாட்டில் சட்டம் ஒழுங்கு மற்றும் குற்றங்களைக் குறைப்பது எதிர்ப்பது குறித்து அரசாங்கத்திற்கு எந்த யோசனையும் இல்லை. சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கும், பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் எந்த வேலைத்திட்டமோ அல்லது தொலைநோக்குப் பார்வையோ இல்லாததொரு அரசாங்கமே இன்று நாட்டில் காணப்படுகின்றது என்றார்.

கொலைகள் தொடர்ந்து நிகழ்ந்து வருகின்றன. பாதாள உலகக் கும்பல்கள், போதைப்பொருள் கடத்தல் கும்பல்கள், பல்வேறு அடக்குமுறை கும்பல்கள், அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரிகள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபட்டுவரும் கும்பல்கள் இந்நாட்டில் தொடர்ந்து கொலைகளைச் செய்து வருகின்றன. இந்த குற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. சமூகத்தில் வாழும் உரிமை இல்லாது போயுள்ளது. வாழ்வதற்கான உரிமையை உறுதி செய்ய அரசாங்கம் தவறிவிட்டது என்றார்.

தேசிய பாதுகாப்பு குறித்து டியூசன் எடுப்போம் என வீராப்பு பேசிய அமைச்சர்களால், தற்போது இயலாமைக்கு மத்தியில் இருந்து வரும் அரசாங்கத்தால், நாட்டின் தேசியப் பாதுகாப்பை உறுதி செய்ய முடியாதுபோயுள்ளது. அரசாங்கம் மெத்தனப் போக்குக் கொள்கையைக் கடைப்பிடித்து வருகிறது. இந்தப் படுகொலைகளும் துப்பாக்கிச் சூடுகளும் நிகழ்ந்து வரும் சந்தர்ப்பத்தில், இச்சம்பங்கள் தேசியப் பாதுகாப்பைப் பாதிக்காது என்று அரசாங்கம் தொடர்ந்து கூறி வருகிறது. வீடுகளிலும், வீதிகளிலும், வேலைத்தளங்களிலும், நீதிமன்றத்திலும் கூட துப்பாக்கிச் சூடு நடக்கும் நிலைக்கு நாடு வந்துள்ளது. இதைத் தடுக்க அரசாங்கத்திடம் எந்தத் திட்டமும் இல்லாமையினால் காட்டுச் சட்டமே கோலோச்சி காணப்படுகின்றது. சட்டத்தின் ஆட்சி இல்லாது போய், கொலை செய்யும் கலாச்சாரம் பரவிக் காணப்படுகின்றது என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இன்று நாட்டு மக்கள் அச்சத்திலும் சந்தேகத்திலும் வாழ்ந்து வருகின்றனர். மிகுந்த அதிர்ச்சிக்கு மத்தியில் இருந்து வருகின்றனர். இந்தப் பிரச்சினைகள் குறித்து அரசாங்கத்தால் எந்தத் தெளிவான நடவடிக்கைகளையும் எடுக்க முடியாது போயுள்ளது. ஜனாதிபதி தலைமையிலான இந்த அரசாங்கம் பலவீனமான அரசாங்கமாகக் காணப்படுகின்றது. தாம் வழங்கிய வாக்குறுதிகளைக் கூட மீறிய இந்த அரசாங்கத்தால் சட்டம் ஒழுங்கைக் கூட சரியாகப் பாதுகாக்க முடியாது போயுள்ளது. எனவே, தூங்கிக் கொண்டிருக்காமல் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்குமாறும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு கோரிக்கை விடுத்தார்.





## அடிக்கல் நாட்டு விழா

புதிய வார்டு வளாகம் 50,000 சதுர அடி பரப்பளவில் அமைக்கப்படவுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் 80 நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கக் கூடிய இரண்டு வார்டுகள், சிறுவர் அவசர சிகிச்சைப் பிரிவு மற்றும் சிறுவர் வெளி நோயாளர் கீமோதெரபி பிரிவு ஆகியவை உள்ளடக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் பந்து எதிரிசிங்க, விமானப்படை பணிப்பகத்தின் அதிகாரிகள், வைத்தியசாலை பணிப்பாளர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

## "குழந்தைகளுக்கான...

மாதிரி சோதனை மற்றும் ஆராய்ச்சியில் குழந்தைகளுக்கான தரம் குறைந்த மற்றும் தீங்கு விளைவிக்கும் பிளாஸ்டிக் பொருட்கள் சந்தையில் கிடைப்பது தெரியவந்துள்ளதாக அவர் ஊடகங்களுக்கு குறிப்பிட்டார்.

தீங்கு விளைவிக்கும் பிளாஸ்டிக் பொருட்களைப் பயன்படுத்துவது குறித்து நடவடிக்கை எடுப்பது குறித்து முடிவு செய்ய, வர்த்தகம், வணிகம், உணவுப் பாதுகாப்பு அமைச்சகம், கல்வி அமைச்சகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம் போன்ற பல அமைச்சகங்களை உள்ளடக்கிய ஒரு நிபுணர் குழு அடுத்த இரண்டு மாதங்களுக்குள் நியமிக்கப்படும் என்று அமைச்சர் கூறினார்.

## திருமணச் சான்றிதழைக் காட்டிய வன்புணர்வு சந்தேகநபர் விடுதலை

குழந்தை அழத் தொடங்கியபோது, நீதிமன்றத்தில் இருந்த ஒரு உறவினரிடம் குழந்தையை ஒப்படைத்து வாக்குமூலம் அளித்துள்ளார்.

குற்றம் சாட்டப்பட்டவர் தங்கள் திருமணச் சான்றிதழை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தனர். அதன்பின்னரே குற்றஞ்சாட்டப்பட்டவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

## சில்லறை தட்டுப்பாட்டால் பயணிகள் நடத்துனர்கள் சிக்கல்

சில்லறைகள் பற்றாக்குறையால், பயணத்துக்கான மிகுதி கட்டணங்களை பயணிகளுக்கு வழங்குவதில் பேருந்து நடத்துனர்கள் கடும் சிரமங்களை எதிர்கொள்வதாக இலங்கை தனியார் பயணிகள் போக்குவரத்து ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த முறை பேருந்து கட்டண திருத்தம் செய்யப்பட்டாலும், மிகுதி பணத்தை பயணிகளுக்கு செலுத்த அதிக அளவு சிறிய நாணயங்கள் தேவைப்படும் என்று சங்கத்தின் செயலாளர் குமாரதாச குளியாபிட்டிய தெரிவித்தார்.

குறைந்தபட்ச பேருந்து கட்டணமான 27 ரூபாய்க்கு பயணியொருவர் முப்பது ரூபாய் வழங்கினார் என்றால், மீகுதி மூன்று ரூபாயையும், 56 ரூபாய் கட்டணத்திற்கு அறுபது ரூபாய் செலுத்தினால், மீதமுள்ள பணமாக நான்கு ரூபாயையும் பயணிகளுக்கு வழங்க வேண்டும்

ஆனால் தற்போது ரூபாய், இரண்டு ரூபாய் மற்றும் ஐந்து ரூபாய் நாணயங்களுக்கு பெரும் பற்றாக்குறை உள்ளது, மேலும் சில சந்தர்ப்பங்களில் பத்து ரூபாய் நாணயங்கள் கூட பற்றாக்குறையாக உள்ளன என்று அவர் கூறினார். இந்த சூழ்நிலைகளைச் சமாளிக்க ப்ரீபெய்ட் கார்டு முறையை செயல்படுத்துமாறு கடந்த காலங்களில் அதிகாரிகளிடம் பல சந்தர்ப்பங்களில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார். எனவே, தற்போதைய அரசு இந்த விஷயத்தில் கவனம் செலுத்தி, விரைவில் ப்ரீபெய்டு கார்டு முறையை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

## சானிட்டரி நாப்கின்களை விநியோகிக்கலாம்



இந்த திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பொருட்களின் தரம், பாதுகாப்பு மற்றும் நிலைத்தன்மையை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டது என்றும் கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

## பாலத்தில் ஏற்பட்ட திடீர் ஓட்டையால்

# லொறி கடலுக்குள் கவிழ்ந்தது

■ கனகராஜா சரவணன்

மண்டபம் வடக்கு மீன்பிடி துறைமுகத்துக்கு செல்லும் பாலத்தின் ஊடாக மினி லொறி ஒன்று பயணித்த போது பாலத்தில் பாரிய ஓட்டை ஏற்பட்டதால், லொறி கடலுக்குள் தலை கீழாகக் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

புதன்கிழமை (2) அன்று காலை இடம்பெற்ற இந்த சம்பவத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் வடக்கு கோயில் வாடி மீன்பிடி துறைமுகத்திற்குச் செல்வதற்காகக் கடலுக்கு நடுவே பாலம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த பாலம் அமைக்கப்பட்டு சுமார் 50 ஆண்டு காலம் கடந்து, பாலம் மிகவும் பழுதடைந்து மோசமான நிலையில் இருப்பதால் உடனடியாக பழைய பாலத்தை அப்புறப்படுத்தி விட்டு புதிய பாலம்



அமைத்துத் தரும்படி மீனவர்கள் மாவட்ட, நிர்வாகத்திற்குத் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வந்தனர்.

இந்த நிலையில் புதன்கிழமை (02) அன்று காலை வழக்கம் போல் வடக்கு மீன்பிடி துறைமுகத்தில் இருந்து மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு செல்ல தயாராகுவதற்காக ஐஸ், மீன்பிடி வலை, உணவுப் பொருட்கள், குடி தண்ணீர் உள்ளிட்டவற்றை ஏற்றிக் கொண்டு பாலத்தின் ஊடாக பிரயாணித்தனர்.

தண்ணீர் வண்டியின் பாரம் தாங்காமல் பாலம் உடைந்து லொறி தலை கீழாக கடலுக்குள் விழுந்து, அதன் சாரதி மற்றும் உதவியாளர் படுகாயமடைந்து, உயிர்த் தப்பியுள்ளனர்.

இதையடுத்து, அவர்களையும் விபத்துக்குள்ளான லொறியையும் மீனவர்கள் மற்றும் பொலிஸார் இணைந்து மீட்டுள்ளனர்.

இதேவேளை, மீன்பிடிக்கச் செல்லும் படகுகளுக்கு மீனவர்களும் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் கொண்டு செல்ல முடியாமல் மீனவர்கள் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.









## போதை ஒழிப்பு விழிப்புணர்வு நாடகம்

■ அ.அச்சுதன்

தேசிய போதை ஒழிப்பு வாரத்தையொட்டி சம்பூர் பொலிஸாரின் ஏற்பாட்டில் போதை ஒழிப்பு விழிப்புணர்வு நடைபவணியும், வீதி நாடகமும் புதன்கிழமை (02) இடம்பெற்றது.

இதன்போது, சேனையூர் மத்திய கல்லூரி, கட்டைபறிச்சான் விபுலானந்தா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் போதை ஒழிப்பு விழிப்புணர்வு பேரணியில் ஈடுபட்டனர்.

விழிப்புணர்வு பேரணியில் ஈடுபட்ட மாணவர்கள் போதைப் பொருள் பாவனைக்கு எதிரான சுலோகங்களை ஏந்தியிருந்ததோடு கோசங்களையும் எழுப்பி பேரணியாகச் சென்றனர்.

போதைப் பொருள் பாவனையால் ஏற்படும் பாதிப்புக்கள், குடும்பப் பிரச்சினைகள், தற்கொலை சம்பவங்கள் தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் வீதி நாடகம் மாணவர்களால் செய்து காட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.











## வத்தேகம விபத்தில் 15 பேர் படுகாயம்

கண்டிக்கு, குடுகல வழியாகப் பயணித்த இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து, வத்தேகம, அரலிய உயன பகுதிக்கு அருகில், வீதியை விட்டு விலகிக் கவிழ்ந்ததில் 15 பயணிகள் காயமடைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் வத்தேகம மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

விபத்து நடந்த நேரத்தில், சுமார் 25 பயணிகள் பேருந்தில் இருந்தனர். பேருந்து சென்று கொண்டிருந்தபோது, திடீரென தனது இருக்கைக்கு அருகில் இருந்த கதவு திறந்ததால், ஓட்டுநர் வாகனத்தின் கட்டுப்பாட்டை இழந்ததாக இலங்கை போக்குவரத்து சபையின் கண்டி மாவட்ட மேலாளர் சனத் பிரசன்ன தெரிவித்தார்.

அவர் பேருந்தை மூட முயன்றபோது, பேருந்தின் கட்டுப்பாட்டை இழந்து,



அது கவிழ்ந்தது. காயமடைந்த பயணிகள் சீரான நிலையில் இருப்பதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. வத்தேகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## அநாகரீகமாக நடந்து கொண்ட பொலிஸாருக்கு இடமாற்றம்




■ ரஞ்சித் ராஜபக்ஷ

ஹட்டன் பொலிஸ் பிரிவில் கடமையாற்றிய ஒரு சார்ஜன்ட் உட்பட பொலிஸ் கான்ஸ்டபிள்கள் ஆறுவர் , ஹட்டன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிற பொலிஸ் நிலையங்களுக்கு மாற்றப்பட்டுள்ளதாக ஹட்டன் பொலிஸ் பிரிவு பொலிஸ் அத்தியட்சகர் பிரதீப் வீரசேகர தெரிவித்தார்.

குறித்த அறுவரும், ஜூன் 10ஆம் திகதி அன்று சிவில் உடையில் ஹட்டன் நகரில் உள்ள ஒரு உணவகத்துக்குச் சென்று, , குடிபோதையில், உணவக மேலாளரை தகாத வார்த்தையால் திட்டி, உணவக உரிமையாளரைத் தாக்க முயன்றதாக கூறப்படும் சம்பவம் தொடர்பான முதற்கட்ட விசாரணையைத் தொடர்ந்து, இடமாற்றம் செய்யப்பட்டனர்.

இச் சம்பவம் தொடர்பாக உணவக உரிமையாளரால், மத்திய மாகாண சிரேஷ்ட துணை பொலிஸ் அதிகாரி மற்றும் ஹட்டன் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில், விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மாணவிக்கு நிர்வாண புகைப்படங்களை அனுப்பிய சாரதி கைது

வயம்ப பல்கலைக்கழக மாணவி ஒருவரின் கையடக்க தொலைபேசிக்கு நிர்வாண புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை அனுப்பி மிரட்டிய சாரதி, வடமேற்கு மாகாண கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளால், புதன்கிழமை (02) அன்று கைது செய்யப்பட்டுள்ளார்.

மஹாவ, பலல்ல, அமுனுகோலேவைச் சேர்ந்த 24 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குருநாகலைச் சேர்ந்த மாணவி, வடமேற்கு மாகாண கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு அளித்த புகாரைத் தொடர்ந்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டனர்.

சந்தேக நபர், போலியான பேஸ்புக் கணக்கைப் பயன்படுத்தி, மாணவியின் பேஸ்புக் கணக்கிற்கு ஆபாசமான புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை அனுப்பி, தன்னுடன் உடலுறவு கொள்ளுமாறு மிரட்டியுள்ளார். இல்லையெனில், அந்த புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள் அனைத்தும் பேஸ்புக்கில் வெளியிடப்படும் என்று மிரட்டியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## ஊடகவியலாளர் மீது பிரதேச சபை உறுப்பினர் தாக்குதல்

■ பாறுக் ஷிஹான், நூருல் ஹுதா உமர்

ஊடகவியலாளர் யூ.எல். மப்றூக் மீது, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அட்டாளைச்சேனை பிரதேச சபை உறுப்பினர் றியா மசூர் என்பவர் தலைமையிலான குழுவினர் புதன்கிழமை (02) இரவு தாக்குதல் நடத்தியதாக அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தனது நண்பர்களுடன் ஊடகவியலாளர் மப்றூக் அட்டாளைச்சேனை பொது மைதானத்திற்கு அருகில் பேசிக் கொண்டிருந்த போது, அங்கு காரில் வந்த அட்டாளைச்சேனை பிரதேச சபை உறுப்பினர் றியா என்பவரும், இன்னுமிருவரும் மப்றூக் மீது எதிர்பாராத விதமாக தாக்குதல் நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

"என்னை பற்றி எப்படி நீ செய்தி எழுதுவாய்" எனக் கேட்டவாறே, மப்றூக் மீது றியா மசூர் என்பவர் தாக்குதல் நடத்தியதாக, பொலிஸ் முறைப்பாட்டில் ஊடகவியலாளர் மப்றூக் கூறியுள்ளார்.

றியா மசூர் மற்றும் அவருடன் வந்தவர்கள் மது அருந்தியிருந்ததாகவும் முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



றியா மசூர் அழைத்து வந்தவர்களுக்கு எதிராக, ஏற்கனவே பொதுமக்களை தாக்கியமை மற்றும் போதை வஸ்து பாவனை உள்ளிட்ட பல்வேறு முறைப்பாடுகள் உள்ளதாகவும் தெரியவருகிறது.

அட்டாளைச்சேனை பிரதேச சபைத் தவிசாளர் ஏ.எஸ். எம். உவைஸ் உள்ளிட்ட தனது நண்பர்களுடன் ஊடகவியலாளர் பேசிக் கொண்டிருந்த வேளையிலேயே இந்தத் தாக்குதல் நடந்துள்ளது. இதன்போது, அங்கிருந்தவர்கள் தாக்குதலை தடுத்து நிறுத்தியதாகவும், இல்லா விட்டால் ஊடகவியலாளருக்கு மேற்படி காடையர்கள் உயிர் ஆபத்தை ஏற்படுத்தியிருக்க கூடும் எனவும் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் கூறுகின்றனர். மேலும், தாக்குதலை மேற்கொண்ட றியா மசூர் என்பவர், தனக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்து விட்டு சென்றதாகவும், ஊடகவியலாளர் மப்றூக் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

## உப்பு கூட்டுத்தாபன ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

■ எம்.யூ.எம்.சனூன்

புத்தளம் - பாலாவி உப்பு கூட்டுத்தாபனத்தில் பணியாற்றும் ஊழியர்கள் சம்பள அதிகரிப்பு கோரிக்கை முன்வைத்து புதன்கிழமை (02) அன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தற்போதைய வாழ்க்கை செலவுக்கு ஏற்றாற்போல, கொடுப்பனவுகள் போதுமானது இல்லை என்றும் அவற்றை அதிகரித்து வழங்குமாறும் நிர்வாகத்திடம் பல முறை கோரிக்கை முன் வைக்கப்பட்டிருந்த போதும் நிர்வாகம் எவ்வித நடவடிக்கையும் எடுக்காததைக் கண்டித்து தங்களது பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுத் தருமாறு கோரி இவர்கள் புதன்கிழமை (02) அன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதற்கு மூன்று தினங்களுக்கு முன்னர் தங்களுடைய பணி பகிஷ்கரிப்பை ஆரம்பித்த ஊழியர்கள், ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

சம்பவ இடத்திற்கு முன்னாள் மாகாணசபை உறுப்பினர் எஸ்.எச். எம். நியாஸ் வருகை தந்து பிரச்சினைகளைக் கேட்டறிந்து கொண்டதுடன், சம்பந்தப்பட்ட இடங்களுக்கும் தொடர்பு கொண்டு உரையாடினார்.

மேலும் அன்றைய தினம் புத்தளம் பிரதேச அபிவிருத்தி குழுக் கூட்டம் இடம்பெற்றமையினால் பிரதேச செயலகத்தை நோக்கி வாகனத்தில் மற்றும் மோட்டார் சைக்கிள்களிலும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கருப்பு பட்டிகளை அணிந்தவாறு பாலாவியிலிருந்து புத்தளம் நோக்கி சென்றமை குறிப்பிடத்தக்கது.


வாடகைக்கு

கல்கிசை டெம்பிள்ஸ் வீதியில், 3 படுக்கையறைகள் (ஒன்று ஏ.சி. வசதியுடன்), 2 கழிப்பறைகள், வேலையாட்கள் அறை, கழிப்பறை, கேரேஜ், சிறிய தோட்டம், கொண்ட ஒற்றை கட்டிடம், வீடு, மாதாந்தம் 75,000 - 80,000 வாடகைக்கு உள்ளது. தொடர்புகொள்ளவும்: 077-768 8144

# ஒன்றரை தசாப்தங்களுக்கு பின்னர் அமுலாகும் சட்டம்

வழங்கப்படும் அறிவுரைகள், நடைமுறையில் உள்ள சட்டங்களை முறையாகக் கடைப்பிடித்தல், சட்டதிட்டங்களை மீறுவோருக்கு எதிராக நீதிமன்றங்களின் ஊடாக தண்டனைகளை வழங்குதல் உள்ளிட்டவற்றை முறையாகக் கடைப்பிடித்தாலேயே பாதி பிரச்சினைகள் மீண்டும், மீண்டும் எழாது.

பாதுகாப்பற்ற வேலைகளில் ஈடுபடுபவர்களுக்கு வேலை பாதுகாப்பு குறித்த வழிகாட்டுதல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. சில நேரங்களில் அது தனிப்பட்ட பாதுகாப்பு உடைகள், தலைக்கவசம், கண்ணாடிகள், கையுறைகள், கால் உறைகள், காலணிகள் போன்றவையாக இருக்கலாம். தொழிலாளர் வழிகாட்டுதல்களில், இவை தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் (தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள்) என்று அழைக்கப்படுகின்றன. அத்தகைய வேலைகளில் ஈடுபடுபவர்களுக்கு அவற்றை வழங்குவது முதலாளியின் பொறுப்பாகும், மேலும் அவற்றைப் பயன்படுத்துவது ஊழியரின் பொறுப்பாகும்.

ஓட்டுநர்களுக்கான சீட் பெல்ட் சட்டம் ஜூலை 1 ஆம் திகதி முதல் மீண்டும் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு முக்கிய காரணம் கடந்த காலத்தில் ஏற்பட்ட உயிரிழப்பு விபத்துகள். இந்த விவகாரம் தொடர்பான பிந்தைய விசாரணைகளில், சீட் பெல்ட் மற்றும் ஹெல்மெட் அணிந்திருந்தால், அந்த விபத்துகளை ஓரளவு குறைத்திருக்கலாம் என்பது தெரியவந்தது.

அப்படியானால், அந்த மரணங்களை அலட்சியத்தால் ஏற்படும் மரணங்கள் என்று நாம் கூற வேண்டும். சீட் பெல்ட் சட்டம் இந்த நாட்டிற்குப் புதிதல்ல. இது முதன்முதலில் இலங்கையில் 2011இல் அமுல்படுத்தப்பட்டது. இது சர்வதேச வீதி போக்குவரத்து சட்ட அமைப்பில் சேர்க்கப்பட்டுள்ளது. தொடர்புடைய சீட் பெல்ட் அணிவது வாகனம் ஓட்டுபவர்களுக்கு ஒரு பாதுகாப்பு நடவடிக்கையாகக் கருதப்படுகிறது.

2011இல் அமல்படுத்தப்பட்ட ஒரு சட்டத்தை 2025இல் மீண்டும் அமல்படுத்த வேண்டும் என்றால், கடந்த காலங்களில் அந்தச் சட்டம் முறையாக அமுல்படுத்தப்படவில்லை என்பதை காணலாம்.

அப்படியானால், ஓட்டுநர் சட்டத்தை முறையாகப் பின்பற்றவில்லை என்பதும், போக்குவரத்து போக்குவரத்து சட்டத்தை முறையாக அமல்படுத்தவில்லை என்பதும் தெளிவாகிறது.

ஃபோர்க்லிஃப்ட், பேக்ஹோ மற்றும் மோட்டார் கிரேடர்கள் போன்ற செயல்பாட்டுப் பணிகளைச் செய்யும் வாகனங்களின் ஓட்டுநர்கள். மருத்துவ காரணங்களுக்காக சீட் பெல்ட் அணிவது பொருத்தமானதல்ல என்று மருத்துவச் சான்றிதழ் பெற்ற நபர்களுக்கு இந்தச் சட்டம் பொருந்தாது.

இது தவிர, மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கர வண்டிகள், வேன்கள், சிறப்பு நோக்க வாகனங்கள், டிராக்டர்கள் மற்றும் அமரர் ஊர்திகளுக்கு இந்தச் சட்டம் பொருந்தாது என்றும் சட்டம் கூறுகிறது. இந்தக் குற்றத்தில் சிக்கிய ஒவ்வொரு நபரும் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்படுவார்கள் என்றும், சீட் பெல்ட் அணியாததற்காக முதல் முறையாகக் குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு குறைந்த அபராதம் விதிக்கப்படும் என்றும் அது கூறுகிறது.

அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட கொள்கை முடிவைச் செயல்படுத்த மக்களும் பாதுகாப்புப் படையினரும் கடமைப்பட்டுள்ளனர். அதுதான் கூட்டுப் பொறுப்பு. பெரிய அளவிலான வீதி விபத்து ஏற்படும்போது, அதிகாரிகளை மட்டும் நோக்கி விரல் நீட்டுவது ஒரு பொதுவான நடைமுறையாகும். தனிநபர் மற்றும் சமூகத்தின் மீதான பொறுப்பு மறந்து, மற்றவர்கள் மீது விரல் நீட்டும் வரை, கொள்கை நடவடிக்கைகளை செயல்படுத்த முடியாது.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு

எழுதுங்கள்



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





## வாழ்வியல் தரிசனம்

எடுத்தெறிந்து பேசுவது மமதையின் வெளிப்பாடு என்றே சொல்ல வேண்டும். விதண்டாவாதத்துடன் எவருக்கும் பணியாமல், தாங்கள் சொல்வது மட்டுமே சரியானது எனப் பேசுபவர்களை, எவருமே விரும்பமாட்டார்கள்.

எமது நடை, உடை, பாவனை, பேசும் முறை போன்றவற்றை, சுற்றி இருப்பவர்கள், எப்பொழுதும் அவதானித்துக் கொண்டே இருப்பார்கள். கண்ணியமாக நடந்து கொள்வபர்களேயே சமூகம் விரும்புகின்றது.

எவ்வளவு பெரும் அந்தஸ்தும் கல்விப் புலமையும் இருப்பவர்களின் நடத்தையிலும் குணத்திலும் கோணல் புத்தி இருந்தால், அவர்களிடம் இருந்து மற்றையோர் விலகிப் போய் விடுவார்கள்.

நெஞ்சத்தில் மாசு இன்றி, கலகலப்பாக, நகைச்சுவை உணர்வோடு, ஆணவச் செருக்கு அற்றவர்களை, விரும்பாதவர்கள் எவருமே இல்லை.

வெறுப்பு குரோதங்களை வளர்ப்பது சுலபமானது. சாந்தம், அமைதி, எளிமையுடன் வாழ்வதற்கு, ஆன்ம சுத்தி அவசியமானது. இதற்கு மனோ சக்தி பிரதானமானது.

நல்லன எதுவெனப் பலருக்கும் தெரியும். ஆனால், அவற்றைக் கடைப்பிடிக்க முயற்சி செய்ய வேண்டும். இது சிரமமானது அல்ல!

–பருத்தியூர் பாலவயிரவநாதன்



தெ.ஞாலசீர்த்தி மீநிலங்கோ

### பொருளாதார நெருக்கடியின் பின்னரான இலங்கை–27

## அந்நியக் கடன் நெருக்கடியும் ஐ.எம்.எவ்வும்

1965 முதலான பொருளாதாரப் புள்ளிவிவரங்கள் அதிகரித்து வரும் கடனுக்கும் அதிகரித்து வரும் கடன் சேவை சுமைக்கும் இடையிலான நெருங்கிய உறவை வெளிப்படுத்தின. ஏனெனில், ஒரு கட்டத்திற்குப் பிறகு, வழக்கமான கடன் ஆதாரங்கள் வறண்டு போய்விடும், இதனால் நாடு அதிக வட்டி விகிதங்களில் புதிய மூலங்களிலிருந்து கடன் வாங்குவதை நாடியது. இதனால் உலக வங்கி நாடு பொருளாதாரச் சிக்கலில் இருப்பதாகக் கருதியது. அதன் வெளிப்புற வருவாயில் 6% அல்லது 7%க்கும் அதிகமானவை அந்நிய நிதிக் கடமைகளால் உறிஞ்சப்படுகின்றன. உலக வங்கியின் தீர்ப்பில், அத்தகைய நாடு இனி கடன் பெறத் தகுதியற்றது, ஏனெனில், நெருக்கடியின் போது, அது அதன் அந்நியக் கடன் திருப்பிச் செலுத்தும் கடமைகளில் தவறிவிடலாம். இலங்கை 1967 அளவில் இந்த நிலையை அடைந்தது. அன்றிலிருந்து அதிக வட்டிக் கடன்கள், குறுகிய கால வர்த்தகக் கடன்கள், அந்நிய வங்கிக் கடன்கள் போன்றவை முக்கியமாக இடம்பெறத் தொடங்கின.

இதை, அரசாங்கத்தின் பொருளாதார நிபுணர் காமினி கொரியா இவ்வாறு விபரித்தார்: 'ஐ.எம்.எஃப்.-இலிருந்து ஒப்பீட்டளவில் குறைந்த செலவில் கூடுதல் வளங்களைப் பெறுவதற்கான வாய்ப்பை இலங்கை இழந்து விட்டது. இதனால் அதிக வட்டி வீதங்களை உடைய வணிக வங்கிக் கடன்களைப் பெறும் வசதி பயன்படுத்தப்பட்டது. இந்த வாய்ப்புக்களை அதிகரிப்பதற்கான நோக்கம் ஏதேனும் ஒரு காரணத்திற்காகத் தீர்ந்து விட்டால், குறுகிய கால வர்த்தக கடன்களை நாடுவதன் மூலம் தற்காலிக நிவாரணம் பெறலாம். வட்டி கட்டணங்கள் அதிகமாக இருக்கலாம் என்பதால் மட்டுமல்லாமல், பொருட்களை வழங்குபவர்கள், அத்தகைய கடன்களுக்கு எதிராக வழங்கப்படும் பொருட்களின் விலையை உயர்த்தக்கூடும் என்பதாலும் இவை வணிக வங்கிக் கடன்களை விட அதிக விலை கொண்டதாக இருக்கும்"

இதனால், அந்நியக் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கு இன்னும் பெரிய அளவில், அதிக வட்டி விகிதங்களில் கடன் வாங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது, மேலும் நாடு அந்நியக் கடன்கள் மற்றும் கடன் சேவையின் ஒரு கொடிய சுழலில் சிக்கியது. நிதியமைச்சர் யு.பி. வன்னியநாயக்க தனது முதல் பட்ஜெட்டில் (1965-66) 'நாடு அந்நியக் கடனில் ஆழமாகச் சிக்கி வருகிறது" என்று எச்சரித்த போதிலும், பற்றாக்குறை மற்றும் உணவு வரிசைகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான அரசியல் உறுதிமொழியின் பேரில் ஆட்சிக்கு வந்த அரசாங்கம், செலவுகள் மற்றும் எதிர்கால விளைவுகளைப் பொருட்படுத்தாமல் நிதி ஆதாரங்களைக் கண்டுபிடிக்க வேண்டியிருந்தது.

எதிர்காலத்தில் ஏற்றுமதி வருவாயில் ஏற்றம் ஏற்படும் என்ற அனுமானத்தின் அடிப்படையில் இந்த அந்நியக் கடன்கள் ஒப்பந்தம் செய்யப்பட்டதாகத் தெரிகிறது. டாக்டர் கொரியா இதை உறுதிப்படுத்துகிறார். "குறிப்பிட்ட அளவிலான வெளிப்புற உதவியால் ஏற்றுமதி வருவாய் கூடுதலாக வழங்கல்களில் உள்ள பற்றாக்குறையை சமாளிப்பதன் மூலம் பொருளாதாரத்தின் வளர்ச்சியைத் துரிதப்படுத்துவது மட்டுமல்லாமல், கடுமையாகக் குறைந்துவிட்ட நாட்டின் வெளிப்புற இருப்புக்களை உருவாக்குவதற்கும் வழிவகுக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இந்த அனுமானத்தின் தோல்வி, முதலில் எதிர்பார்த்ததை விட முற்றிலும் மாறுபட்ட சூழ்நிலையை ஏற்படுத்தியது."

அந்நியக் கடன்கள் இலங்கையின் பொருளாதாரத்தில் நிரந்தர இடத்தைப் பிடித்துள்ளதால், அவற்றை உன்னிப்பாகக் கவனிக்க வேண்டியதாயிற்று. இந்நிலையில், இலங்கையின் பொருளாதாரச் சிக்கலை அவதானித்த உலக வங்கி, நிதியளித்து எய்ட்-சிலோன் என்ற உதவிக் குழுவை உருவாக்கியது. இது பொருட்களுக்கான கடன்கள், முந்தைய அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட கடுமையான இறக்குமதிக் கட்டுப்பாடுகள் காரணமாகத் தடுமாறிக் கொண்டிருந்த பொருளாதாரத்திற்கு உணவு மற்றும் தொழில்துறை மூலப்பொருட்களை வழங்குவதற்கான அவசர நடவடிக்கையாக ஆகஸ்ட் 1965இல் தொடங்கப்பட்டன. இந்த நடவடிக்கை 18 மாதங்கள் மட்டுமே நீடிக்கும் என்று கருதப்பட்டாலும், வழக்கமான இறக்குமதிகளுக்கு நிதியளிப்பதற்கான நிரந்தர கடன் ஆதாரமாக இது தொடரப்பட்டது. டாக்டர் கொரியா "நுகர்வு நோக்கங்களுக்காக பொருட்கள் உதவியை" பயன்படுத்துவது அரசாங்கக் கொள்கையின் ஒரு பகுதியாக இல்லை" என்று வாதிட்டாலும், உண்மையில் அது மா, பிற உணவுப் பொருட்கள், உடுதுணி போன்ற நுகர்வோர் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு அதிகளவில் பயன்படுத்தப்பட்டது. 1969ஆம் ஆண்டின் பிற்பகுதியில், எய்ட்-சிலோன் குழுமத்திலிருந்து பொருள் உதவியாக ரூ.780 மில்லியன் பயன்படுத்தப்பட்டது, மேலும் குழு கூடுதலாக ரூ.900 மில்லியனை உறுதியளித்தது.

பெரும் மூலப்பொருள்களை வழங்குவோரின் கடன்களைப் பொறுத்தவரை, இவை முதன்முறையாக 1967இல் கணக்கிடப்பட்டன. அதன் பிறகு வேகமாக அதிகரித்தன. இத்தகைய கடன்கள் குறுகிய கால அதிக வட்டி கடன்களாகும். இவை பொதுவாக நான்கு முதல் ஆறு ஆண்டுகள் வரை, அந்நிய மூலப்பொருள் வழங்குநர்களால் வழங்கப்பட்ட உபகரணங்களின் விலையை உள்ளடக்கும். இத்தகைய முதலாவது கடன், சப்புகஸ்கந்தாவில் ஒரு எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை நிர்மாணிப்பதற்காகப் பெறப்பட்டது. குறுகிய கால வர்த்தக கடன்களும் (ஒரு வருடம் வரை ஒத்திவைக்கப்பட்ட கொடுப்பனவுகளை உள்ளடக்கிய) இந்தக் காலகட்டத்தில் தொடங்கப்பட்டன, மேலும் அவை பர்மாவிலிருந்து அரிசி மற்றும் ஆஸ்திரேலியா மற்றும் பிரான்சிலிருந்து கோதுமை இறக்குமதியை மேற்கொள்வதற்கு அரசாங்கத்திற்கு நிதியளிக்கப் பயன்படுத்தப்பட்டன. மூலப்பொருள் வழங்குநர் கடன்கள் மற்றும் குறுகிய கால வர்த்தக கடன்கள் இரண்டும் அடுத்தடுத்த ஐக்கிய முன்னணி அரசாங்கத்தால், குறிப்பாக 1972 க்குப் பிறகு இன்னும் விரிவாகப் பயன்படுத்தப்பட்டன. 1960களின் இரண்டாம் பாதியில் முக்கியத்துவம் பெற்ற அந்நிய நிதியின் மற்றொரு புதிய ஆதாரம், ஐக்கிய இராச்சியம் மற்றும் அமெரிக்காவில் உள்ள வணிக வங்கிகளிடமிருந்து இலங்கை மத்திய வங்கியால் குறுகிய கால கடன்கள் பெறப்பட்டமையாகும். இவை வணிக வட்டி விகிதங்களைக் கொண்டிருந்தன, மேலும் மத்திய வங்கியின் ஸ்டெர்லிங் பத்திரங்கள் அந்நிய வணிக வங்கிகளுடன் பிணையமாக உறுதியளிக்கப்பட்டன, இதனால் இந்தக் கடனைப் பெற முடிந்தது.

ஏற்றுமதி வருவாயின் உறுதியற்ற தன்மை மற்றும் தற்காலிக கொடுப்பனவு இருப்பு பற்றாக்குறை காரணமாக, குறுகிய கால கடன்களைப் பெறுவதற்கு அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தை (ஐ.எம்.எவ்.) பெரிதும் நம்பியிருந்தது. ஏற்றுமதி ஏற்ற இறக்கங்களுக்கான இழப்பீட்டு நிதியுதவியின் கீழ் ஐ.எம்.எவ் இலிருந்து பெறப்பட்ட பணம் (கொள்முதல்கள்) இறக்குமதிகளுக்கு நிதியளிக்கப் பயன்படுத்தப்பட்டன, அதே போல் ஐ.எம்.எவ் உடனான தற்காலிக ஏற்பாடுகளின் கீழ் பெறப்பட்ட கடன் 1968 அளவில் ரூ.271 மில்லியனாக இருந்தன. இதற்காக நிதியமைச்சர் ஐ.எம்.எவ் க்கு தனது நன்றியைத் தெரிவித்தார். 1970ஆம் ஆண்டின் இறுதியில், மிகப்பெரிய தொகையான ரூ.800 மில்லியன் கடனாக வாங்கப்பட்டது.

இலங்கையின் ஏற்றுமதி வருவாய் நிலையற்றதாக மட்டுமல்லாமல், சுயமாகத் தலைகீழாக மாறும், சுழற்சி இயல்புடையதாக இருந்திருந்தால், குறுகிய கால அந்நியக் கடனின் அதிக அளவு பாதுகாக்கப்பட்டிருக்கும். அப்படி இருந்திருந்தால், பற்றாக்குறை காலங்களில் கடன் வாங்கியதை, ஏற்றக் காலங்களில் நாடு திருப்பிச் செலுத்தியிருக்க முடியும். ஆனால், நாட்டின் ஏற்றுமதி வருவாய் உண்மையில் தற்காலிகமாக நிலையற்றதாக இருக்கவில்லை. ஏற்றுமதி வருவாயில் நீண்டகால சரிவு ஏற்பட்டது. இந்தச் சூழலில், குறுகிய காலக் கடன்கள் முதிர்ச்சியடைந்தபோது, நாடு புதிய மூலங்களிலிருந்து அதிக விலைக்கு கடன் வாங்க வேண்டியிருந்தது அல்லது கடன் மறு அட்டவணைப்படுத்தல் வடிவத்தில் சர்வதேச தொண்டு நிறுவனங்களால் பிணை எடுக்கப்பட வேண்டியிருந்தது.

இலங்கை உறுதியாக 'அதிகாரப்பூர்வ கடன்களை' நாடியது. ஆனால், இவை உள்நாட்டுச் செய்தி ஊடகங்களால் 'அந்நிய உதவி' என்று குறிப்பிடப்பட்டன. இலங்கை மக்கள் தமக்கு உதவி செய்த நாடுகளுக்கு நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும் என்றும் ஊடகங்கள் எழுதின.

இலங்கை போன்ற ஒரு நாட்டிற்கும் பெரிய மேற்கத்திய சக்திகளுக்கும் இடையிலான அரசியல் உறவு, பலதரப்பு உதவியில் நியாயமான பங்கைப் பெறுவதில் முக்கியத்துவம் வாய்ந்தது. திருப்பிச் செலுத்தும் கடமை இல்லாத மானியங்கள் 1965-70 காலகட்டத்தில் குறைந்தன, மேலும், சராசரியாக ஆண்டுக்கு ரூ.50 மில்லியன் மட்டுமே இவ்வாறு கிடைத்தது. நீண்ட கால மூலதன உதவி 1965-66இல் ரூ.77 மில்லியனாக இருந்தது, ஆனால், 1967-69இல் சராசரியாக ரூ.55 மில்லியனாகக் குறைந்தது. இதற்கு நேர்மாறாக, பொருள் உதவி என்று அழைக்கப்படுவது 1966இல் ரூ.106 மில்லியனிலிருந்து 1969இல் ரூ.272 மில்லியனாக படிப்படியாக அதிகரித்தது. வளர்ந்த நாடுகளில் உள்ள ஏற்றுமதி நிறுவனங்கள் தங்கள் நலிந்த தொழில்களைச் செயல்படுத்த அல்லது மேலதிக விவசாயப் பொருட்களுக்குச் சந்தையைக் கண்டறிய தங்கள் அரசாங்கங்களைக் கடன்களை வழங்கச் செல்வாக்கு செலுத்துவதே இந்த அதிக அளவுக்கான காரணம்.

## கடிதங்கள்



### போக்குவரத்து பிரச்சினையால் அவதி

பதுளை மாவட்டத்தில் மிக உயரமான பிரதேசமாக கருதப்படும் பதுளை, நமுனுகுல மலை உச்சிக்கு அருகில் அமைந்துள்ள க்ளென் எல்பின் தோட்டத்தின் மக்கள் போக்குவரத்து பிரச்சினையால் அவதிப்படுகின்றனர்.

அப்பகுதியில் அதே பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவருக்கு சொந்தமான சிறிய பேருந்து மாத்திரம் போக்குவரத்தில் ஈடுபட்டு வருகின்றது. குறித்த வீதி மோசமான நிலையில், உள்ளதால் அந்த பேருந்தும் அடிக்கடி சேதமடைந்து, சேவையிலிருந்து நிறுத்தப்படும் என பேருந்தின் உரிமையாளர் கூறியுள்ளார்.

மேலும், தியானவல பிரதேசத்தில் இருந்து பாடசாலை செல்லும் மாணவர்கள் 10 கி.மீற்றருக்கும் மேற்பட்ட தூரம் நடந்து செல்ல வேண்டியுள்ளதுடன், முச்சக்கர வண்டி கூட வீதியில் பயணிப்பதில்லை.

நோயாளிகளை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும்போதும் பாதிக்கப்படுவதாகவும் இதற்கு முன்னர் கர்ப்பிணிப் பெண்கள் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லும் வழியிலேயே உயிரிழந்துள்ள சம்பவமும் நடந்துள்ளது.

அத்துடன், வைத்தியசாலைக்கு நடந்து செல்லும் சில முதியவர்கள் அதிக சோர்வு ஏற்பட்டு வழியில் இறந்துள்ளதாகவும் மக்கள் கூறுகிறார்கள். மேலும், இது தொடர்பாக உரிய அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுக்குமாறு பிரதேசவாசிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

- பாலித்த ஆரியவங்ச

மட்டக்களப்பு மற்றும் வெலிமடையில் கொமர்ஷல் வங்கி

# விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தை முன்னெடுத்தது






மட்டக்களப்பு மற்றும் வெலிமட ஆகிய பகுதிகளில் இரு வேறு நிகழ்ச்சிகளை நடத்தியதன் மூலம், இலங்கையில் விவசாய மாற்றத்திற்கான தனது உறுதிப்பாட்டை கொமர்ஷல் வங்கி மேலும் வலுப்படுத்தியுள்ளது. விவசாயிகள், குறிப்பாக விவசாயத்துறையில் ஈடுபட்டுள்ள இளைஞர்கள், நவீன, நிலையான பயிர்ச்செய்கை நடைமுறைகளை மேற்கொள்வதற்கான கருவிகள், அறிவு மற்றும் நம்பிக்கையுடன் அவர்களைத் தயார்படுத்துவதே இந்த நிகழ்ச்சி திட்டத்தின் நோக்கமாகும்.

வங்கியின் விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் இரண்டு நிகழ்வுகளும் நடத்தப்பட்டன, இது நாட்டின் முக்கிய விவசாயத் துறையில் புத்தாக்கம் மற்றும் முன்னேற்றத்திற்கான முன்னணி பங்குதாரராக வங்கியின் பங்கை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

மட்டக்களப்பில் உள்ள மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் அண்மையில் நடத்தப்பட்ட ஒரு அறிமுக மற்றும் விழிப்புணர்வு அமர்வில் 75 க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் பங்குபற்றியதுடன் இந்த அமர்வில் நிதியியல் கல்வியறிவு, நவீன விவசாய இயந்திரங்களின் பயன்பாடு மற்றும் நெல்பயிர்ச்செய்கையில் மேம்பட்ட தொழில்நுட்பங்களின் பயன்பாடு ஆகிய மூன்று முக்கியமான பகுதிகளை உள்ளடக்கியதாக இருந்தது. இலங்கை மத்திய வங்கியின் பிரதிநிதிகள் பொறுப்பான நிதி முகாமைத்துவம் மற்றும் முறையான கடன் அணுகல் குறித்த விவாதங்களுக்கு தலைமை தாங்கினர், அதே வேளை இதில் கலந்து கொண்ட பிரவுன் நிறுவனம் உற்பத்தித்திறனை மேம்படுத்தவும் தொழிலாளர் சார்புநிலையைக் குறைக்கவும் வடிவமைக்கப்பட்ட அதிநவீன இயந்திரங்களை பங்கேற்பாளர்களுக்கு அறிமுகப்படுத்தினர்.

இந்திரா குழுமத்தின் ஸ்தாபகரும், ஸ்மார்ட் விவசாயத்தில் நிபுணருமான எம். ராஜேதன், கிழக்குப் பல்கலைக்கழக விவசாய பீடத்தைச் சேர்ந்த கல்வியாளர்களுடன் இணைந்து ட்ரோன் உதவியுடன் விவசாயம், இயந்திரமயமாக்கப்பட்ட நடவு மற்றும் தரவு சார்ந்த உள்ளீட்டு உகப்பாக்கம் போன்ற நவீன நுட்பங்களைப் பற்றிய நடைமுறை நுண்ணறிவுகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சித்திட்டம் விவசாயத் துறை, மத்திய வங்கி மற்றும் உள்ளூர் விவசாய அதிகாரிகளின் ஆதரவுடன் நடத்தப்பட்டது.

வெலிமடை மற்றும் பண்டாரவளை பகுதிகளைச் சேர்ந்த 50 விவசாயிகளை இலக்காகக் கொண்டு, வெலிமடையில் உள்ள திவுரும்வெல ஆலயத்தில் நடத்தப்பட்ட மற்றொரு திட்டத்தில், மேட்டு நில பயிர்களுக்கான அரை-பாதுகாக்கப்பட்ட விவசாய நடைமுறைகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டது. இந்த முயற்சியானது காலநிலை அழுத்தத்திலிருந்து விவசாயிகளின் பயிர்களைப் பாதுகாக்கும் அதே வேளையில் மகசூல் மற்றும் நிலைத்தன்மையை அதிகரிக்கும் மேம்பட்ட பயிர்ச்செய்கை நுட்பங்களுடன் விருத்தி செய்வதை நோக்கமாகக் கொண்டது. இதில் விவசாயிகள் விவசாய வல்லுநர்கள், தொழில்நுட்ப சேவை வழங்குநர்கள் மற்றும் இ.எம்.கே.ஏக்கநாயக்க போன்ற விவசாய விஞ்ஞானிகளிடமிருந்து சிறந்த பயிற்சி மற்றும் வடிவமைக்கப்பட்ட ஆலோசனைகளைப் பெற்றனர். இந்த திட்டம் பூச்சிகளுக்கெதிரான முகாமைத்துவம், நீர்ப்பாசனம் மற்றும் காலநிலை, எதிர்ப்பு விவசாயத்திற்கான நடைமுறை முறைமைகளை உள்ளடக்கியது, அதே வேளை மண் உணரிகள் மற்றும் சொட்டு நீர்பாசன முறைமைகளுக்கான கருவிகளைப் பங்கேற்பாளர்களுக்கு அறிமுகப்படுத்தியது.

SLT-MOBITEL, SLIoT 2025இல்

# அடுத்த தலைமுறை தொழில்நுட்ப திறமையாளர்களை கொண்டாடியது




SLT-MOBITEL, புத்தாக்கம் மற்றும் இளைஞர் வலுவூட்டலுக்கான தனது ஒப்பற்ற அர்ப்பணிப்பை மீண்டும் உறுதி செய்யும் வகையில், அண்மையில் நடைபெற்ற இலங்கையின் முன்னணி Internet of Things (IoT) போட்டியான SLIoT Challenge 2025இல் அடுத்த தலைமுறை தொழினுட்ப திறமையாளர்களை கொண்டாடியது.

இந்தப் போட்டியின் மாபெரும் இறுதிப் போட்டி மற்றும் விருதுகள் வழங்கும் நிகழ்வு மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. போட்டிக்கான SLT-MOBITELஇன் ஆதரவு என்பது, பாரம்பரிய உதவிக்கு அப்பாற்பட்டதாக அமைந்திருந்ததுடன், SLIoT 2025ஐ சிறந்த நிலைக்கு கொண்டு செல்வதில் அர்த்தமுள்ள வகையில் பங்களிப்பை வழங்கியிருந்தது.

SLT-MOBITELஇன் அனுசரணையில், மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் கணனி விஞ்ஞானம் மற்றும் பொறியியல் பிரிவினால் இலங்கை பொறியியலாளர் நிறுவகத்துடன் (IESL) இணைந்து ஏற்பாடு செய்யப்பட்ட இந்த SLIoT Challenge 2025இல், நாடு முழுவதையும் சேர்ந்த நூற்றுக்கணக்கான மாணவர்கள் மற்றும் நிபுணர்கள் ஒன்றிணைக்கப்பட்டிருந்தனர். பாடசாலை, பல்கலைக்கழகம் மற்றும் திறந்த நிலைகளில் பங்குபற்றுனர்கள் போட்டியிட்டு, IoT தீர்வுகளை வெளிப்படுத்தியிருந்தனர். இலங்கையின் டிஜிட்டல் மாற்றியமைப்பை முன்னெடுத்துச் செல்லவும், நிஜ உலக சவால்களுக்கு முகங்கொடுக்கும் வகையிலும் இவற்றை வடிவமைத்திருந்தனர்.

இந்த நிகழ்வின் வெளிப்பாடுகளில் SLT-MOBITELஇன் ஈடுபாடு மிக முக்கியமானதாக அமைந்திருந்தது. மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற Microcontrollers மற்றும் IoT Basics குறித்த நடைமுறை பாடசாலை பயிற்சி பட்டறை உட்பட பல தயார்ப்படுத்தும் நடவடிக்கைகளை SLT-MOBITEL ஏற்பாடு செய்தது. தொழில் வல்லுநர்கள் மற்றும் இளங்கலை வழிகாட்டிகளால் நடத்தப்பட்ட இந்தப் பட்டறை, மாணவர்களுக்கு அடிப்படை IoT கொள்கைகள் மற்றும் நடைமுறை microcontroller நிரலாக்கத்தை அறிமுகப்படுத்தியதுடன், ஆர்வத்தைத் தூண்டி எதிர்கால கண்டுபிடிப்பாளர்களை வளர்த்தது. SLT-MOBITEL தவிசாளர் கலாநிதி. மோதிலால் டி சில்வா நிகழ்வில் பங்கேற்றதுடன், அவருடன் SLT-MOBITELஇன் இதர சிரேஷ்ட அதிகாரிகளும் இணைந்து கொண்டனர். போட்டிகளில் பங்கேற்றிருந்தவர்கள் வெளிப்படுத்தியிருந்த அர்ப்பணிப்பு மற்றும் ஈடுபாட்டை அவர்கள் பாராட்டியதுடன், வெற்றியீட்டியவர்களின் புத்தாக்கம் மற்றும் சிறந்த செயற்பாடுகளுக்கு வாழ்த்துகளையும் தெரிவித்தனர். போட்டியினூடாக சிறந்த திறமை வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன், ஒவ்வொரு பிரிவிலிருந்தும் வெற்றியீட்டிய அணியினர், அவர்களின் ஆக்கத்திறன் மற்றும் தொழில்னுட்ப சிறப்பு போன்றவற்றுக்காக கௌரவிக்கப்பட்டிருந்தனர்.

பாடசாலை பிரிவில், முதலாமிடத்தை கலஹிட்டியாவ மத்திய கல்லூரியின் Neuroverse அணி சுவீகரித்தது. கொழும்பு-10 புனித சூசையப்பர் கல்லூரியின் சென்டினெல் அணி இரண்டாமிடத்தையும், எம்பிலிபிட்டிய போதிராஜ கல்லூரியின் செனுக மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர். IoT ஊடாக நிஜ உலக சவால்களை எதிர்கொள்வதில் இளம் மனங்களின் குறிப்பிடத்தக்க திறனை வெளிப்படுத்தியிருந்தது.

பல்கலைக்கழக பிரிவில், அனைத்து உயர் விருதுகளையும் மொரட்டுவ பல்கலைக்கழக அணிகள் பெற்றன.

Zypher இந்த தனித்துவமான தீர்வுக்காக முதலிடத்தையும், அதைத்தொடர்ந்து Dyson Sphere இரண்டாவது இடத்தையும், Aqua Guard மூன்றாவது இடத்தையும் பிடித்தன. ஒவ்வொன்றும் மேம்பட்ட தொழில்நுட்பத் திறன்களையும் IoT தொழில்நுட்பத்தின் முன்னோக்கிச் சிந்திக்கும் பயன்பாடுகளையும் வெளிப்படுத்தின.

திறந்த பிரிவில், களுத்துறையைச் சேர்ந்த Smartcare அதன் தாக்கம் மற்றும் நடைமுறை IoT கண்டுபிடிப்புகளுக்காக முதலிடத்தைப் பிடித்தது. கம்பஹாவைச் சேர்ந்த Tech Tanks இரண்டாவது இடத்தையும், காலியைச் சேர்ந்த TeraNode மூன்றாவது இடத்தையும் பிடித்தது.





# மகாத்மா காந்திக்கு கொழும்பில் கருங்கல் சிலை



சமூக சேவைகளில் ஈடுபடும் பலரின் செயற்பாடுகள் பற்றி வெளிச்சத்துக்கு வருவது குறைவாக இருக்கிறது. எனினும், அவ்வாறான சிறு,சிறு குழுக்களின் உதவிக்க ரங்களைக் கேட்கும் போது, இவ்வளவு சிறிய குழுவால் இந்த பெரிய உத விகளைச் செய்யமுடியுமா? என மூக்கில் விரலை வைத்துச் சிந்திக்கவும் தூண்டியிருக்கிறது.

சமூகப் பணி என்பது உள் மனதில் இருந்து உதிக்க வேண்டிய ஒரு பண்பாகும். இல்லையேல், என்னதான் நினைத்தாலும் பொதுப்பணியை செய்யவே முடியாது. நாம் உண்டு நமது வேலை உண்டு என நினைத்துக் கொண்டிருக்கும் பலரும் இருக்கும் சமூகத்தில், ஏதாவது ஒரு சில உதவிகளையாவது செய்து கொண்டிருக்கும் சிலரும் இருக்கத்தான் செய்கின்றனர்.

கொழும்பு, முகத்துவாரம் (மோதரையில்) இயங்கும் பொதுப்பணி மன்றம் பற்றி, முகத்துவாரத்தைச் சேர்ந்த பலரும் கேள்விப்பட்டிருப்பீர்கள், அந்த மன்றத்தின் ஊடாக வழங்கப்படும் உதவிகளை பெற்றிருப்பீர்கள், சமூக சேவைகளில் இணைந்து அவர்களுக்கு கரங்கொடுத்தீர்ப்பீர்கள்.

அந்த மன்றம், கொழும்பில், கருங்கல்லினால் ஆன முழு சிலையை, மகாத்மா காந்திக்கு வைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது என்பது பலருக்கும் தெரியாது. அந்த வகையில், பொதுப் பணி மன்றத்தின் தலைவர் ஏ.ஜோசப் (வயது 68) எனது நிறுவனத்திற்கு வருகை தந்தார். அவருடனான கலந்துரையாடலில், ச்சா, இப்படியெல்லாம் செய்திருக்கின்றார்கள். என எண்ணத் தோன்றியது.

எதிர்கால திட்டங்க ளைக் கேட்டால், இந்த ஒரு சிறு குழுவின் முயற்சிக்கு உண்மையில் பரோபகாரிகள் தங்கள் இயன்ற ஒத்துழைப்பை நல்கவே வேண்டும் அவர்களின் முயற்சிக்கு வாழ்த்து தெரிவிக்கும் அதே நேரத்தில், இவ்வாறான நல் உள்ளங்கொண்ட உதவி கரங்களை நீட்டுவோருக்கு இயன்றளவு ஒத்துழைப்பது எமது கடப்பாடாகும் என நினைக்கின்றோம்.

இந்த பொதுப்பணி மன்றம் 1977ஆம் ஆண்டு முதல் சமூக பணிகளில் ஈடுபட்டு வருகிறது. கல்விக்கு முக்கியத்துவம் கொடுப்பதை முதன்மை பணியாக கொண்டிருக்கும் இந்த மன்றம், புலமைப்பரிசில் பரீட்சை, கல்விப்பொதுத் தராதார சாதாரண தர பரீட்சைக்கு தோற்றவிருக்கும் பரீட்சார்த்திகளுக்கு முன்னோடி கருத்தரங்குகளை நடத்தி வருகின்றது.

கொழும்பு முகத்துவாரத்தில் பின்தங்கிய நிலையில், இருக்கும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக இவ்வாறு இலவச கருத்தரங்குகளை நடத்துவதாக, பொதுப்பணி மன்றத்தின் தலைவர் ஜோசப் பகிர்ந்துகொண்டார்.


ஏ.ஜோசப்

ஐவரடங்கிய குடும்பமாக இருந்தாலும், தன்னுடைய மூன்று பிள்ளைகளும் திருமணம் முடித்து தனிக்குடித்தனம் சென்று விட்டனர். என்னுடைய மனைவி நோய்வாய்ப்பட்டு படுத்த படுக்கையில் இருக்கிறார். எனினும், சமூக பணியை தான் கைவிடவில்லை என்றார்.

அந்த பிரதேசத்தில் பாடசாலைக்கு செல்லும், ஏழ்மையான மாணவர்களை இனங்கண்டு, அவர்களுக்கு புத்தக பைகள், அப்பியாச கொப்பிகளை வழங்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. அத்துடன், இலவசமாக மருத்துவ முகாம்களும் நடத்தப்படுகின்றன. கண்தானம், இரத்ததானம் ஆகிய முகாம்களுக்கு ஆட்களை திரட்டி செல்லும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றன என்றார்.

பசுமை புரட்சி எனும் திட்டத்தின் கீழ், அப்பிரதேசத்தில் மரக்கன்றுகளை நாட்டும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டன என தெரிவித்த அவர், கரையோர பிரதேசங்களில் பொலித்தீன், பிளாஸ்டிக் போன்ற மக்காத கழிவுகளை அகற்றும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டன என்றார்.

பாடசாலைக்கு செல்லாதவர்களை பாடசாலைக்கு அனுப்பி வைக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டாலும், 1983ஆம் ஆண்டு ஜூலை கலவரத்துக்குப் பின்னர், சமூக பணிகளை முறையாக முன்னெடுக்க முடியவில்லை என மனந்தொந்து கொண்டார். எனினும், அப்பணிகளை மீளவும் ஆரம்பித்திருப்பாதால் பெரும் மகிழ்ச்சியை அடைந்தார்.

1983ஆம் ஆண்டுகளுக்கு முன்னர், மகாத்மா காந்தி பொது மன்றம், ஐக்கிய பொது பணி சம்மேளனம் உள்ளிட்ட பல பொது மன்றங்களை, களுத்துறை, மாத்தளை, நீர்கொழும்பு உள்ளிட்ட பிரதேசங்களில் முன்னெடுத்ததாக நினைவுகூர்ந்த அவர், மகாத்மா காந்தி, 1927ஆம் ஆண்டு நவம்பர் 12ஆம் திகதியன்று இலங்கைக்கு விஜயம் செய்து, ஜிந்துப்பிட்டி ராம்லால் மகாராஜா தர்ம சத்திரத்தில் தங்கியிருந்தார் என்றார்.

அதனை நினைவு கூர்ந்து, கருங்கல்லிலான முழுச்சிலையை நிர்மாணித்து, ஜிந்துப்பிட்டி ராம்லால் மகாராஜா தர்ம சத்திரத்தில் வைப்பதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்து உள்ளதாகவும். அச்சிலையை இந்தியாவில் இருந்தே தருவிக்க வேண்டும் என்றார்.

மகாத்மா காந்தி இலங்கைக்கு வருகை தந்த 100 ஆண்டுகள் நிறைவடைவதை நினைவுகூர்ந்து, நூற்றாண்டு விழாவை மிகவும் பிரமாண்டமான முறையில் நடத்துவதற்கு பொதுப்பணி மன்றத்தின் ஊடாக நடவடிக்கைகளை எடுத்து உள்ளதாகவும் தெரிவித்தார்.

தலைமன்னார் ஊடாக அழைத்துச் சென்று இந்தியாவிற்கு அனுப்பி வைத்த போதும், கொழும்பு கோட்டையில் ஒலித்த மரண ஓலங்கள் தன்னுடைய காதுகளில் இன்னும் ஒலிக்கிறது எனத் தெரிவித்த அவர், கொழும்பில் மட்டுமன்றி நகரங்களில் வாழும் பொருளாதார ரீதியில் நலிவடைந்து இருக்கும் இந்திய வம்சாவளி மக்களுக்கு உதவ வேண்டும் என்ற ஏக்கத்தையும் பகிர்ந்துகொண்டார்.

**கடவுள்**
**சிலருக்கு வசதியை தருவார்...**
**சிலருக்கு அறிவை தருவார்...**
**சிலருக்கு புகழை தருவார்...**
**ஆனால்,**
**வெகு சிலருக்கு தான்**
**தன் மனதை தருவார்**
**அவர்களே..!**
**உதவும் குணம் உள்ளவர்கள்**
**அவர்களே..!**
**நம்மோடு வாழும் கடவுள்**
**என்பார்கள்...**

அதற்கமைய பொதுப்பணி மன்றத்தின் பணிகள் சிறப்புற வேண்டும். அந்த மன்றத்தின் தலைவர் உள்ளிட்ட ஏனைய செயற்பாட்டு உறுப்பினர்கள் மற்றும் அங்கத்தவர்களின் சமூக பணிகள் நீடி நிலைத்து செல்ல வேண்டும் என வாழ்த்தி, பரோபகாரிகள் தங்கள் இயன்ற வரையில் உதவிசெய்து, கருக்கலிலான மகாத்மா காந்தியின் முழு சிலையை கொழும்பில் நிர்மாணிப்பதற்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்பதே எமது அவாவாகும்.



அமெரிக்கா

50 ஆண்டுகளில் காணாத வீழ்ச்சி

# சரிந்தது அமெரிக்க டொலரின் மதிப்பு

சுமார் அரை நூற்றாண்டு காலத்துக்கு பிறகு அமெரிக்க டொலர் மதிப்பு அதிக பலவீனம் அடைந்துள்ளது.

சர்வதேச நாடுகள், முக்கிய வர்த்தக கூட்டாளி நாடுகளின் கரன்சிக்கு எதிரான டொலர் மதிப்பு கடந்த ஆறு மாதங்களில், 10 சதவீதத்துக்கு மேல் வீழ்ச்சி கண்டிருக்கிறது. இந்த அளவு வீழ்ச்சியை, 1973ஆம் ஆண்டில் தான் அது கண்டது.

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பொறுப்பேற்றது முதல், நிலையற்ற வரி விதிப்புகள், வரி மாற்றங்கள், அதிக உற்பத்தி கொண்ட நாடுகளுடன் பிணக்குகள் என்று அவர் மேற்கொண்ட நடவடிக்கைகள், டொலர் மதிப்பில் நிலையற்ற



தன்மைக்கு காரணம் என்று பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர்.

அமெரிக்காவின் கடும் வரி விதிப்பு மற்றும் கட்டுப்பாடுகள் காரணமாக, வெளிநாட்டினரின் முதலீடுகள் குறைந்து வருகின்றன.

இதனால், அரசு முன்பு எப்போதும் இல்லாத வகையில், அதிக கடன் வாங்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

ட்ரம்பின் வர்த்தக திட்டங்கள், பணவீக்க கவலைகள், அதிகரிக்கும் அரசின் கடன் ஆகியவை அமெரிக்க டொலரின் மதிப்பில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன.

இதற்கிடையே, வரி விதிப்புகளை அடிக்கடி நிறுத்தி வைப்பதும் தினசரி மாற்றி அறிவிப்பதும், முதலீட்டாளர்கள், கரன்சி வணிகர்கள் இடையே குழப்பத்தை ஏற்படுத்துகிறது. இதனால், டொலர் மதிப்பு சரிகிறது.

ட்ரம்ப் ஜனாதிபதியாக பதவியேற்றதும், டொலர் மதிப்பு வேகமாக உயர்ந்தது.

பங்குச் சந்தைகள் வீழ்ச்சி, கடன் வட்டி உயர்வு, அதிக பணவீக்கம் ஆகியவற்றால் தளர்ந்திருந்த முதலீட்டாளர்களை, ட்ரம்ப் விதித்த கடுமையான வரிகள் தடுமாற வைத்துள்ளதாக என்று பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர்.

ஜப்பான்

## விஞ்ஞானிகள் உருவாக்கும் செயற்கை இரத்தம்

மனிதர்களிடமிருந்து தானமாகப் பெறும் இரத்த வகைகளைப் போல அல்லாமல், அனைத்து வகை ரத்தத்துக்கும் பொருந்தக்கூடிய, மிக அவசர காலத்தில் உயிர் காக்கும் சேவைக்காக ஜப்பான் விஞ்ஞானிகள் செயற்கை இரத்தத்தை உருவாக்கி வருகிறார்கள்.

தற்போது இந்த இரத்த வகைகள் ஆய்வுக்கூட சோதனையில் உள்ளதுடன், இது பயன்பாட்டுக்கு வந்து விட்டால் கோடிக்கணக்கான உயிர்கள் காப்பாற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால், இந்த செயற்கை இரத்தம், மனிதர்களிடமிருந்து பெறப்படும் இரத்த தானத்துக்கு முடிவு கட்டாது என்றும் அதன் ஒரு பகுதியாகவே இது தொடரும் என்றும் கூறப்படுகிறது. துல்லியமாகச் சொல்லப்போனால், காலாவதியான இயற்கை இரத்தத்தின் மறுசுழற்சி என்பதால், மனித இரத்தம் வீணாவதையே இது தடுக்கும், உயிரிழப்புகளைக் குறைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இரத்தம் என்பது அறுவைச் சிகிச்சைகள், விபத்து, பிரசவம், புற்றுநோய் உள்ளிட்ட சில சிகிச்சைகளின்போது, நோயாளியின் உயிரைக் காப்பாற்ற மிகவும் அத்தியாவசியமானதாக மாறிவிடுகிறது.

உலகம் முழுவதும் இரத்த வங்கிகளில் எப்போதும் இரத்த இருப்பு குறைவாகவே இருக்கும். வேறு இரத்த வகையைப் பெற்றுக்கொண்டு, கேட்கும் இரத்த வகையைக் கொடுக்கும் நிலைதான் இப்போதுவரை இருக்கிறது.

இந்த நிலையில்தான், ஜப்பானின் நாரா மருத்துவ பல்கலைக்கழகத்தின் ஆய்வகத்தில், பேராசிரியர் ஹிரோமி சகாய் தலைமையிலான விஞ்ஞானிகள் குழு செயற்கை இரத்தத்தை உருவாக்கிப் பரிசோதித்து வருகிறது. இது நீல நிறத்தில் இருக்கும் என்றும், இது தயாரிக்கப்பட்டு விட்டால் கிட்டத்தட்ட 2 ஆண்டுகள் வரைகூட பாதுகாத்து வைக்க முடியும் என்பதே இதன் சிறப்பாக உள்ளது.



இந்தோனேசியா

கடலில் படகு மூழ்கி விபத்து

## 4 பேர் உயிரிழப்பு; 38 பேர் மாயம்

இந்தோனேசியாவில் உள்ள பிரபல சுற்றுலா தலமான பாலி தீவு அருகே 65 பேருடன் சென்ற படகு கடலில் மூழ்கி விபத்துக்குள்ளானதில் 4 பேர் உயிரிழந்துள்ளதாகவும் 38 பேர் மாயமானதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விபத்துக்குள்ளான படகில் 53 பயணிகள், 12 பணியாளர்கள் மற்றும் 14 லொறிகள் உட்பட 22 வாகனங்கள் இருந்துள்ளன.

விபத்து நடந்த தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற அதிகாரிகள் 20க்கும் மேற்பட்டோரை மீட்டுள்ளனர்.

இந்த விபத்தில் இதுவரை 4 பேர் உயிரிழந்துள்ளதாகவும் 38 பேர் மாயமானதாகவும்



மாயமானவர்களை தீவிரமாக தேடி வருவதாக அதிகாரிகள் கூறினர். இதனால் உயிரிழந்தோர் எண்ணிக்கை மேலும் உயரும் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**“ விபத்துக்குள்ளான படகில் 53 பயணிகள், 12 பணியாளர்கள் மற்றும் 14 லொறிகள் உட்பட 22 வாகனங்கள் இருந்துள்ளன**

பாகிஸ்தான்

ஐக்கிய நாடுகள்

## பாதுகாப்பு கவுன்சிலின் பொறுப்பு

ஐக்கிய நாடுகள் சபையின் (ஐ.நா.) பாதுகாப்பு கவுன்சில் தலைமையகம் அமெரிக்காவின் நியூயார்க் நகரில் அமைந்துள்ளது.

193 நாடுகள் இந்த அமைப்பின் உறுப்பினர்களாக உள்ளனர். ஒவ்வொரு மாதமும் பாதுகாப்பு கவுன்சிலின் தலைமை பொறுப்பை ஏற்று நடத்தும் அங்கீகாரம் நிரந்தர உறுப்பினர் நாடுகளுக்கு வழங்கப்படும்.

இந்தநிலையில், ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் தலைமை அலுவலகத்தில் இந்த மாதத்திற்கான




கூட்டம் நடந்தது. இதில் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு கவுன்சில் தலைமை பதவியை பாகிஸ்தானுக்கு வழங்க தேர்வு செய்யப்பட்டது. இதனை தொடர்ந்து பாதுகாப்பு கவுன்சில் தலைமை பொறுப்பை பாகிஸ்தான் ஏற்றுக்கொண்டது.

புதுடெல்லி

இந்தியா – அமெரிக்கா இடையே

## 10 ஆண்டு ஒப்பந்தம்

2025ஆம் ஆண்டு இறுதிக்குள் 10 ஆண்டுகளுக்கான பாதுகாப்பு கட்டமைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட இந்தியாவும், அமெரிக்காவும் ஒப்புக்கொண்டுள்ளதாக அமெரிக்க மூத்த பாதுகாப்பு செய்தித் தொடர்பாளர் கர்னல் கிறிஸ் டெவின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகன் வெளியிட்டுள்ள அறிக்கையில், “செவ்வாய்க்கிழமை (01) அன்று நடைபெற்ற ஒரு தொலைபேசி உரையாடலின் போது, அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் பீட் ஹெக்செத்தும், இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங்கும் இந்த ஆண்டு இறுதியில் சந்திக்கும் போது புதிய கட்டமைப்பை இறுதி செய்து கையெழுத்திட ஒப்புக்கொண்டுள்ளனர்.




முதலாவது போட்டியில்

# பங்களாதேஷை வீழ்த்தியது இலங்கை

பங்களாதேஷுக்கு எதிரான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில், கொழும்பு ஆர். பிரேமதாஸ மைதானத்தில் புதன்கிழமை (02) அன்று நடைபெற்ற முதலாவது போட்டியில் இலங்கை வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இலங்கை

இலங்கை: 244/10 (49.2 ஓவ.)
(துடுப்பாட்டம்: சரித் அசலங்க 106 (123), குசல் மெண்டிஸ் 45 (43) ஓட்டங்கள்.
பந்துவீச்சு: தஸ்கின் அஹ்மட் 4/47, தன்ஸிம் ஹஸன் சகிப் 3/45, நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ 1/32, தன்வீர் இஸ்லாம் 1/44)

பங்களாதேஷ்: 167/10 (35.5 ஓவ. )
(துடுப்பாட்டம்: தன்ஸிட் ஹஸன் 62 (61), ஜாகிர் அலி 51 (64) ஓட்டங்கள்.
பந்துவீச்சு: வனிது ஹசரங்க 4/10, கமிந்து மெண்டிஸ் 3/19, மகேஷ் தீக்ஷன 1/32, அசித பெர்ணாண்டோ 1/38)

போட்டியின் நாயகன்: சரித் அசலங்க.




இங்கிலாந்து எதிர் இந்தியா:

## முன்னிலைக்கு இரண்டு அணிகளும் போராட்டம்

இங்கிலாந்து, இந்திய அணிகளுக்கிடையேயான இரண்டாவது டெஸ்டில் முன்னிலைக்கு இரண்டு அணிகளும் போராடுகின்றன.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை இங்கிலாந்து வென்ற நிலையில், பேர்மிங்ஹாமில் புதன்கிழமை (02) ஆரம்பித்த இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்தின் அணித்தலைவர் பென் ஸ்டோக்ஸ், இந்தியாவை முதலில் துடுப்பெடுத்தாடப் பணித்தார்.

இந்திய அணியில் கடந்த போட்டியில் விளையாடிய சாய் சுதர்சன், ஷர்துல் தாக்கூர், ஜஸ்பிரிட் பும்ராவை நிதிஷ் குமார் ரெட்டி, வொஷிங்டன் சுந்தர், ஆகாஷ் டீப் ஆகியோர் பிரதியிட்டிருந்தனர்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இந்தியா ஆரம்பத்திலேயே லோகேஷ் ராகுலை கிறிஸ் வோக்ஸிடம் இழந்தது.

பின்னர் யஷஸ்வி ஜைஸ்வாலும், கருண் நாயரும் ஓட்டங்களைச் சேர்த்த நிலையில், 31 ஓட்டங்களுடன் பிறைடன் கார்ஸிடம் நாயர் வீழ்ந்தார்.

ஜைஸ்வாலும், அணித்தலைவர் ஷுப்மன் கில்லும் இனிங்ஸை நகர்த்த முற்பட்ட வேளை அணித்தலைவர் பென் ஸ்டோக்ஸிடம் 87 ஓட்டங்களுடன் ஜைஸ்வால் வீழ்ந்தார். தொடர்ந்து றிஷப் பண்டின் இணைப்பில் இனிங்ஸை கில் நகர்த்திய நிலையில் 25 ஓட்டங்களுடன் ஷொய்ப் பஷிரிடம் பண்ட் வீழ்ந்ததோடு, அடுத்து வந்த நிதிஷ் குமார் ரெட்டியும் அடுத்த ஓவரிலேயே வோக்ஸிடம் வீழ்ந்தார்.

பின்னர் இரவீந்திர ஜடேஜாவின் இணைப்பில் கில் ஓட்டங்களைச் சேர்க்கின்ற நிலையில் முதல் நாள் முடிவில் 5 விக்கெட்டுகளை இழந்து 310 ஓட்டங்களை இந்தியா பெற்றுள்ளது. களத்தில் கில் 114 ஓட்டங்களுடனும், ஜடேஜா 41 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமலுள்ளனர்.



## நான்காமிடத்துக்கு முன்னேறிய ஹேசில்வூட்

சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் போட்டிகளுக்கான பந்துவீச்சாளர்களின் தரவரிசையில் நான்காமிடத்துக்கு அவுஸ்திரேலியாவின் ஜொஷ் ஹேசில்வூட் முன்னேறியுள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான முதலாவது டெஸ்டில் 7 விக்கெட்டுகளைக் கைப்பற்றியதையடுத்தே ஐந்தாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி நான்காமிடத்தை ஹேசில்வூட் அடைந்துள்ளார்.

இப்போட்டியில் 6 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய மேற்கிந்தியத் தீவுகளின் ஜேடன் சியல்ஸ், 10ஆம் இடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி ஒன்பதாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்கள்,
1.ஜஸ்பிரிட் பும்ரா,
2. ககிஸோ றபாடா,
3.பற் கமின்ஸ்,
4.ஜொஷ் ஹேசில்வூட்,
5.நொமன் அலி,
6.மற் ஹென்றி,
7.நேதன் லையன்,
8.மார்கோ ஜன்சன்,
9.ஜேடன் சியல்ஸ்,
10. மிற்செல் ஸ்டார்க்.

மேற்குறிப்பிட்ட



போட்டியில் 120 ஓட்டங்களைப் பெற்ற அவுஸ்திரேலியாவின் ட்ரெவிஸ் ஹெட், 13ஆம் இடத்திலிருந்து மூன்று இடங்கள் முன்னேறி 10ஆம் இடத்தை அடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்கள்,
1.ஜோ றூட்,
2.ஹரி ப்றூக்,
3.கேன் வில்லியம்சன்,
4.யஷஸ்வி ஜைஸ்வால்,
5.ஸ்டீவ் ஸ்மித்,
6.றிஷப் பண்ட்,
7.தெம்பா பவுமா,
8.பென் டக்கெட்,
9.கமிந்து மெண்டிஸ்,
10.ட்ரெவிஸ் ஹெட்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்கள்,

இரவீந்திர ஜடேஜா, 2. மெஹிடி ஹஸன் மிராஸ், 3. மார்கோ ஜன்சன், 4. பற் கமின்ஸ், 5. பென் ஸ்டோக்ஸ்.

## விம்பிள்டன்: வெளியேற்றப்பட்ட பலோனி



விம்பிள்டன் டென்னிஸ் தொடரிலிருந்து உலகின் ஐந்தாம் நிலை வீராங்கனையான ஜஸ்மின் பலோனி வெளியேற்றப்பட்டுள்ளார்.

வியாழக்கிழமை (03) அதிகாலை நடைபெற்ற ரஷ்யாவின் கமில்லா ரஹிமோவாவுடனான இரண்டாவது சுற்றுப் போட்டியில் 6-4, 4-6, 4-6 என்ற செட் கணக்கில் தோல்வியடைந்தே தொடரிலிருந்து இத்தாலியின் பலோனி வெளியேறினார்.

சிம்பாப்வேவுக்கு எதிரான

## இரண்டாவது டெஸ்டில் மஹராஜ் இல்லை

### தென்னாபிரிக்காவுக்கு தலைமை தாங்கவுள்ள முல்டர்

சிம்பாப்வேக்கெதிரான இரண்டாவது டெஸ்டிலிருந்து அடிவயிற்றுப் பகுதி உபாதை காரணமாக தென்னாபிரிக்காவின் பதில் தலைவர் கேஷவ் மஹராஜ் விலகியுள்ளார்.

அந்தவகையில் தென்னாபிரிக்காவுக்கு சகலதுறைவீரர் வியான் முல்டர் தலைமை தாங்கவுள்ளார்.

மஹராஜ்ஜின் பிரதியீடாக செனுரன் முத்துசாமி பெயரிடப்பட்டதுடன்,



இரண்டாவது டெஸ்டுக்கான குழாமில் முன்னர் இணைவதாக இருந்த வேகப்பந்துவீச்சாளர் லுங்கி என்கிடி குழாமிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 04, ஜூலை 2025, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.